
# திராவிடத்தால் வாழ்கிறோம்

904

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

20

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# மந்திரிகுமாரி

## அதிரவைத்த அந்தணர் எதிர்ப்பு!

படங்கள் உதவி : ஞானம்



ஒரு திரைப்படத்தின் கதாநாயகன் கதாநாயகியைவிட, வில்லனுக்கும் அவன் காதலிக்கும் முதலிடம் கொடுத்து, கதையும் வசனமும் எழுதப்பட்ட திரைக்காவியம் 'மந்திரிகுமாரி'. கலைஞரின் முதல்படம். படத்தின் பெயர் மட்டுமல்ல, படத்தின் கதையையும் தொடக்கம் முதல் மந்திரியின் குமாரியே நகர்த்திச் செல்கிறாள். அவளது சிலையை அனைவரும் வணங்கி நிற்பதுடனே படமும் நிறைவடையும்.

தனது முதல் படத்திலேயே, பெண்ணை முதன்மைப் பாத்திரமாக முன்னிறுத்திய கலைஞரின் எழுத்து, இன்றைய 2025-ஆம் ஆண்டு காலத் திரையுலகில்கூட நினைத்துப் பார்க்க முடியாதது. படத்தின் முக்கியப் பாத்திரமேற்ற எம்.ஜி.ஆர்., 1970-க்குப் பிறகு நடித்த திரைப்படங்களிலும் இதை நாம் காண முடியாது. ஆனால், 1950-களிலேயே கலைஞரின் எழுதுகோல், அதைச் சாத்திய மாக்கியிருக்கிறது.

கதை, திரைக்கதை, வசனம் முத்தமிழறிஞர் கலைஞர். இயக்கம் டி.ஆர்.சுந்தரம் - எல்லீஸ் ஆர்.டங்கன், தயாரிப்பு மாடர்ன் தியேட்டர்ஸ். கலைஞர் தனது முதல் படத்திலேயே முத்திரை பதித்த படம் இது.

### படத்தின் கதை!

முல்லை நாட்டு மன்னன் (எஸ்.எஸ்.சிவ சூரியன் ) நாட்டின் மத குருவுக்கு (எம்.என். நம்பியார்) கட்டுப்பட்ட அடிமையாக ஒருபுறம் இருக்கிறான். மற்றொரு புறம் நீதி வழங்கும் மந்திரியின் பேச்சையும் கேட்டு நடக்கிறான். நாட்டின் தளபதி வீரமோகனுடன் (எம்.ஜி.ஆர்) போட்டியிட்டு தளபதி பதவியைப் பறிகொடுத்த கோபத்தில், கொலை கொள்ளை பாலியல் வன்முறையில் ஈடுபட்டு, நாட்டின் அமைதியைச் சீரழிக்கும் பார்த்திபன் (எஸ்.ஏ.நடராசன்) மன்னனின் மகள் ஜீவரேகாவை (ஜி.சகுந்தலா) கைப்பற்ற நினைக்கிறான். ஆனால், அவளோ தளபதி வீரமோகனைக் காதலிக்கிறாள். அவளது தோழியும் மந்திரியின் மகளுமான அமுதவள்ளி (மாதுரிதேவி) பார்த்திபனின் காதல் வலையில் விழுகிறாள்.



நாட்டில் நடைபெறும் கொலை கொள்ளையால் பாதிக்கப்பட்டு உடைமைகளையும் உறவுகளையும் பறிகொடுத்த மக்கள் மன்னனிடம் முறையிடுகின்றனர். மன்னன் தளபதி யிடம் பொறுப்பை ஒப்படைக்கிறான். தளபதி வீரர்களுடன் மாறுவேடத்தில் சென்று பார்த்திபனைச் சிறைபிடித்து வந்து நிறுத்துகிறான். மத குரு தனது மகனைக் காப் பாற்ற வாதாடுகிறான். தளபதி மீது குற்றம் சுமத்துகிறான். ஆனால், தனது மகள் பார்த்திபனைக் காதலிப்பதை அறிந்தும், அவள் அவனைக் காக்க வேண்டுகோள் விடுத்ததையும் மீறி, நீதியைக் காக்க வேண்டி மந்திரி, பார்த்திபனுக்கு மரண தண்டனை அளித்துத் தீர்ப்பு வழங்குகிறார்.

தனது தீர்ப்பு சரியானதுதானா? என்ற சந்தேகத்தில் மந்திரியானவர் காளியின் முன் போய் நின்று 'அம்மா நான் வழங்கிய தீர்ப்பு சரிதானே?' என்று கேட்கிறார். ஆனால், காளி சிலையின் பின் மறைந்து நின்று அவர் மகள் அமுதவள்ளி 'நீ வழங்கிய தீர்ப்பு தவறு' என்று கூறியதைக் கேட்டு அதிரும் மந்திரி, காளிதான் பேசினாள் என்றெண்ணி, மன்னனிடம் சொல்லி பார்த்திபனின் மரண தண்டனையைத் தடுத்து நிறுத்துவதுடன் பார்த்திபனுக்குத் தளபதி பதவியையும் அளித்து, அதுவரை தளபதியாக இருந்த வீரமோகனின் பதவியைப் பறித்து, நாட்டை விட்டுத் துரத்த உத்தரவும் இடுகின்றனர்.

மத குரு வீரமோகனை சவுக்கால் அடித்து, நாட்டின் எல்லையில் வீசுகிறார். இதனைக் கேள்வியுறும் மன்னனின் மகள் ஜீவரேகா ஓடி வந்து, வீரமோகனுடன் சேர்ந்து இருவரும் நாட்டைவிட்டுப் போய் துன்பப்படுகின்றனர். மறுபுறம் அமுதவள்ளியைத் திருமணம் செய்து கொண்டும் தளபதியாகியும் இன்பமாய் வாழும் பார்த்திபன், தனது கொள்ளைக் கூட்டத்தை வைத்து, மீண்டும் கொலை கொள்ளையிலும் ஈடுபடுகிறான். தனது தந்தையான மத குருவும், மனைவியும் எவ்வளவு தடுத்தாலும் கேட்க மறுக்கிறான்.

ஒருநாள், அவனது கொள்ளைக் கூட்டத்தினர் வீரமோகனைத் தாக்கிவிட்டு, ஜீவரேகாவைத் தூக்கிக் கொண்டு வந்து விடுகின்றனர். அவளைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்படும் பார்த்திபனிடம் இருந்து சண்டையிட்டு அமுதவள்ளி ஜீவரேகாவைக் காப்பாற்றுகிறாள். இறுதியாக, மன்னனைக் கொன்று நாட்டைக் கைப்பற்றி அரசனாக மத குரு திட்டமிடுகிறான். தனது மனைவியைக் கொன்று, ஜீவரேகாவை மணக்க பார்த்திபன் முயற்சிக்கிறான். இதனை அறியும் அமுதவள்ளி தந்திரமாகத் தனது கணவனை மலையுச்சியி லிருந்து கீழே தள்ளிவிட்டுக் கொலை செய் கிறாள். அதே நேரம் மத குருவிடமிருந்து அரசனைக் காப்பாற்றும் வீரமோகன் மீதே கொலைக் குற்றம் சாற்றப்பட்டு, மரண தண்டனை அளிக்கப்படுகிறது. அங்கு வரும் மந்திரிகுமாரி, நடந்த உண்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி வீரமோகனைக் காப்பாற்று வதுடன் ஜீவரேகாவையும் அவனுடன் சேர்த்து வைக்கிறாள். தனது மகனைக் கொலை செய்த அமுதவள்ளி மீது கத்தியை வீசி மத குரு கொலை செய்கிறான். மத குருவுக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது. இறந்த மந்திரிகுமாரியின் மார்பளவு சிலையின் முன் அனைவரும் வணங்கி நிற்பதுடன் படம் நிறைவடைகிறது.

### அந்தணர் குல மாணிக்கம்!

1950-களில் இத்திரைப்படம் வெளிவந்தபோது அன்றைய அரசும், அதிகாரத்தில் வீற்றிருந்த பார்ப்பனர்களும் எவ்வாறு இத்திரைப்படத்தினை எதிர்கொண்டனர், வெளியிட அனுமதித்தனர் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், அந்த அளவுக்கு மிகவும் வெளிப்படையாக கலைஞரின் வசனங்களும், பாத்திரப் படைப்பும் பார்ப்பனர்களுக்கு எதிரானதாக, கோபமூட்டுவதாக அமைந் திருக்கும். இன்றைக்கெல்லாம் அதுபோல எளிதாகக் குடுமியும் மொட்டைத் தலையுமாக ஒரு வில்லன் பாத்திரத்தைப் படைக்கவோ அவரை நோக்கி 'அந்தணர் குல மாணிக்கம்' என வசனம் எழுதவோ இயலாது.

ஒருபுறம் மத குருவை எதிர்த்து தளபதி பகுத்தறிவு யுத்தம் நடத்துகிறார். மற்றொருபுறம் மத குருவின் மகன் பார்த்திபனுடைய ஆணாதிக்க பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராகப் பெண்கள் போராடுகின்றனர். குறிப்பாக, படத்தின் தொடக்கம் முதல் இறுதிக்காட்சி வரை மத குரு தனது அதி காரத்தை நிறுவப் போராடிக் கொண்டிருப்பார்.

### கவித்துவ உரையாடல்கள்

"சுதந்திரமாகத் திரிந்த சூரியன், காற்றுப்பட்டு கரையும் மேகங்களிடம் மன்னிப்புக் கேட்பதா?

"குங்கும நிறத்தழகி, கொத்தழகு கூந்தலழகி, உன் கொவ்வைச் செவ்வாய் திறந்து ஒருமுறை குயில் மொழி சிந்திவிட்டால்போதும்... கோடி முறை நீ மன்னித்ததாக அர்த்தம்"

"வறண்ட பாலைவனத்தில் நீராட நினைத்தேன் மின்மினியை விண்மீன் என்று நினைத்து ஏமாந்தேன். ஆனால், பாசிபிடித்த குட்டையில் பளிங்கு நீரையும் சாக்கடைச் சேற்றில் சந்தன மணத்தையும் எதிர்பார்த்த பைத்தியக்காரியாகிவிட்டேன்"

இப்படி படம் நெடுக கவித்துவ வசனங்கள் நிரம்பியிருக்கும். வசனங்களால் தமிழ்த் திரையுலகைத் திருப்பிப்போட்ட இந்தப் படத்தை இயக்கவும் தயாரிக்கவும் துணிந்த மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம் அவர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்.

...காட்சி விரியும்

> சுதந்திரமாகத் திரிந்த சூரியன், காற்றுப்பட்டு கரையும் மேகங்களிடம் மன்னிப்புக் கேட்பதா?

## சகிப்புத்தன்மையைக் கொல்லும் சங்கிகள்!

'இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு' என்ற பெருமைமிக்க தகுதியை சீர்குலைக்கும் சதி வேலைகளை சங் பரிவாரங்கள் கடந்த 11 ஆண்டுகளாக துணிச்சலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டுத் தலங்களைக் குறிவைப்பது, வாழ்விடங்களைத் தகர்ப்பது, வாழ்வாதாரச் சூழலைச் சீர்குலைப்பது, அவர்களின் கடைகளை அடித்து நொறுக்குவது என வட மாநிலங்களில் வன்முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பிற மதங்களின் மீதான வெறுப்பு என்ற நிலையில் இருந்து, குறைந்தபட்ச சகிப்புத்தன்மைகூட இல்லாமை என்ற நிலையை நோக்கி சங் பரிவார்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். வட மாநிலங்களில் இந்து காலண்டர் முறைப்படி, தற்போது ஷ்ரவண மாதத்தைக் கடைபிடிக்கிறார்கள். உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாத்தில், இது இந்துக்களின் புனித மாதம், இந்த மாதத்தில் எப்படி இறைச்சி உணவுகளை விற்கலாம் என இஸ்லாமிய வியாபாரிகளை சிலர் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

தவிர, பிரபல உணவகமான கே.எஃப்.சி. மற்றும் அங்குள்ள உள்ளூர் உணவகமான நசீர் ஃபுட்ஸ் ஹோட்டலுக்கும் சென்று, இந்த மாதம் முழுவதும் இறைச்சி உணவுகளை விற்கக்கூடாது, கடைகளை இழுத்து மூடுங்கள் என 'ஹிந்து ரக்ஷா தள்' என்கிற அமைப்பு மிரட்டியுள்ளது. கடைகளில் இறைச்சி உணவுகளை விற்பது தங்களின் மனதைப் புண்படுத்துகிறது என அந்தக் கடைகளின் முன் கோஷமிட்டு அச்சுறுத்தி உள்ளனர். இந்தப் போக்கினை அம்மாநில அரசு கண்டு கொள்ளாதது மட்டுமல்ல; ஆளும் பா.ஜ.க. பிரமுகர்களும் ஆதரித்துள்ளனர்.

உணவு என்பது தனிநபரின் விருப்பத்திற்கும், சுதந்திரத்திற்கும் உட்பட்டது. ஆனால், 'எவரோ உண்பது தன் மனதைப் புண்படுத்தும் எனவே கடைகளை இழுத்து மூடுங்கள்' என்பது எப்பேர்ப்பட்ட சர்வாதிகாரப் போக்கு என்று விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. பெரும்பான்மை இந்து மக்களின் உணவு விருப்பத்தை, சிறு கும்பல் தடுப்பதும் அதற்கு அரசு ஆதரவளிப்பதும் ஜனநாயகத்துக்கு விரோதமானது என கண்டனங்கள் வலுத்துள்ளன.

இறைச்சிக் கடைகளை மூட வைப்பது, இஸ்லாமியர்கள் வர்த்தக நிறுவனங்களை முடக்குவது, கடைகளில் உரிமையாளர் பெயரை எழுதி வைக்கச் சொல்வது என்கிற அடாவடிகளுக்கு ஆன்மிக அடை யாளத்தைத் தருவது அபாயகரமானதாக மாறி வருகிறது. அந்தக் கும்பலின் வன்முறைப் போக்குகள் முறியடிக்கப்பட வேண்டும். மக்கள் முறியடிப்பர்.

## ஃப்ளாஷ்பேக்



### 78 நாள் சிறைவாசம்!



மா.திருவேங்கடசாமி

1987-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார். அப்போது கோவை மாவட்டம், காரமடை ஒன்றியம், சுண்டகொறைபுதூர் பகுதியில் கொடியேற்று நிகழ்வில் கலந்துகொண்டு, சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று 78 நாள் சிறைவாசம் கண்டு, விடுதலை ஆகி இருந்த எனக்கு, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கி இருந்த மொழிப்போர்த் தியாகி சான்றிதழையும் வாங்கி, பொதுமக்களிடம் வாசித்துக் காண்பித்துப் பாராட்டினார். வாழ்வில் மறக்க முடியாத பெருமையைத் தேக்கி வைத்திருக்கும் படம் இது.

– மா.திருவேங்கடசாமி,
துணை அமைப்பாளர், மாவட்ட இலக்கிய அணி, கோவை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### போராட்டக் குழு!

1956-ஆம் ஆண்டு, மாநில எல்லைப் பிரிப்பில் தமிழ்நாட்டின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், பிப்ரவரி 20-ஆம் தேதி பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. போராட்டக் குழுத் தலைவராக நீதிக்கட்சித் தலைவர் பி.டி.இராசன் செயல்பட்டார். தி.மு.க. சார்பில், என்.வி.நடராசன், தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி., கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ப.ஜீவானந்தம், சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் எஸ்.சி.சி.அந்தோணி பிள்ளை, பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் ஆகியோர் செயலாளர்களாகச் செயல்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131